ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௬. சுக்கில௵ ஐப்பசி௴ பகுதி ௰.
Vol 6. & October November 1929. No. 10.

நம்பிள்ளை வைபவம்.

நம்பிள்ளையென்ற திருநாம வரலாறு.

"தஞ்சீரை ஞானியர்கள் தாம்புகழும் வேதாந்தி நஞ்சீயர்" என்று பெரியஜீயரான வரவரமுனிவரராற் கொண்டாடப்பட்ட பெருமையும் "வானிட்ட கீர்த்திவளர் கூரத்தாழ்வான் மகிழவந்த தேனிட்டதார் நம்பெருமாள் குமார"ராகிய பட்டரால் நம்முடைய ஜீயர் என்று அபிமானிக்கப்பட்டு அவர் ஸந்நிதியிலே ஸகலார்த்தங்களையும் ஐயந்திரிபின்றிக்கேட்டு, பின்பு திருவாய்மொழிக்கு நூறுரு அர்த்தம் நிர்வஹித்தருளி அதனால் சதாபிஷேகம் பண்ணப்பெற்ற ஏற்றமும் உடையராய நஞ்சீயர், தமதாசார்யரான "பட்டர் நல்லருளால் எஞ்சாத ஆர்வமுடன்" "மாறன் பணித்ததமிழ் மறைக்கு" வேதாந்தி நஞ்சீயரென்ற தம் திருநாமத்தின் பெருமைக்கேற்ப வேதாந்த சாஸ்திரமான ஸ்ரீபாஷ்யத்தின் ஸங்கியையாலே ஒன்பதினாயிரமாக ஒரு வியாக்யானம் செய்தருளிப் பட்டோலைகொண்டு, இதனை ஒரு (1) சம்புடத்தில் நன்றாக எழுதித்தர வல்லாருண்டோவென்று தம்முடைய ஸ்ரீபாதத்து முதலிகளைக் கேட்டருள; அவர்களும் தென்கரையில் நின்றும் நம்பூர் வரதராஜரென்பாரொருவர் பலகாலும் இங்கே வருவர்; அவர் நன்றாக எழுதுவரென்று விண்ணப்பித்தனர். ஜீயரும் அவரை யழைப்பித்துச் சிறிது எழுதிக

(1) சம்புடம்—ஏடு.

காட்டுமென்ன அவரும் அவ்வாறே யெழுதிக்காட்ட அனைத்த திருக்கண்சாத்தி விசேஷகடாக்ஷம் செய்து அவர்க்குப் (2) பஞ்சஸம்ஸ்காரஞ் செய்தருளி ஒன்பதினாயிரத்தையும் ஒருரு அருளிச்செய்து தப்பாமல் எழுதித்தாருமென்று பட்டோலையை வரதராஜர் கையிலே கொடுத்தருளினர்.

அவரும் அதனை வாங்கித்திருமுடியிலே கட்டிக்கொண்டு தமது ஊர்க்குச் செல்லும்பொருட்டுக் காவேரிப் பெருக்கிலிறங்கி நீந்திச் செல்லும்பொழுது ஓரலைவந்து மோதவே கிரந்தம் ஆற்றில் வீழ்ந்து அமிழ்ந்து போயிற்று. வரதராஜரும் அக்கரை சேர்ந்து ‘பட்டோலை போய்விட்டதே! நாம் யாது செய்யக்கடவோம்’ என்று மிகுதியும் சிந்தித்து ஒரு சுவடியை யுண்டாக்கிக்கொண்டு தமக்கு ஒருருவாக நஞ்சீயர் ப்ரஸாதித்தருளின அர்த்த விசேஷங்களையெல்லாம் ஒன்றுந் தப்பாமல் ஒன்பதினாயிரமும் நன்றாகவெழுதிக்கொண்டு சென்று ஜீயர் ஸந்நிதியிலே ஸமர்ப்பித்தனர்.

ஜீயரும் அதனை அவிழ்த்துத் திருக்கண்சாத்துமளவில் தாமருளிச்செய்த (3) கட்டளையாயிருக்கச்செய்தேயும் அங்கங்கே பலவிடங்களிலும் சொற்கட்கு ஏற்றவாறு விசேடவுரைகள் எழுதியிருப்பதுகண்டு திருவுள்ளமுகந்தருளி, வரதராஜரைநோக்கி இது மிகவும் நன்றாயிராநின்றது; இஃதென்னென்று கேட்டருளினர். அவரும் பயத்தினால் மௌனமாயிருக்க ஜீயரும் பயப்படவேண்டாம் உண்மையைச்சொல்லுமென்ன வரதராஜரும் ஜீயர் திருவடிகளிலே தெண்டனிட்டெழுந்து நின்று கைகட்டிக்கொண்டு அவரைநோக்கி ஜீயா! திருக்காவேரி நீச்சாகையாலே பட்டோலையை அடியேன் தலையிலே கட்டிக்கொண்டு நீந்தப்புக்கவாறே ஓரலை வந்து மோத அது

---

(2) பஞ்சஸம்ஸ்காரம் — தாபம், புண்ட்ரம், நாமம், மந்த்ரம், யாகம் என்பன. அவற்றில், தாபமாவது—ஹோமாக்னியில் தஹிக்கப்பட்ட சங்கு சக்கரங்களைத் தோளிற்றரிப்பித்தல். புண்ட்ரமாவது—பன்னிரு திருமண் காப்பை உரியவிடங்களில் முறைப்படி இடுவித்தல். நாமமாவது—ஆசார்யனா லிடப்படுந் தாஸ்யநாமம். மந்திரமாவது—திருமந்த்ரோபதேசம். யாகமாவது—திருவாராதனக்ரமம்.

(3) கட்டளை—பாணி; அமைப்பு.

ஆற்றில் வீழ்ந்து அமிழ்ந்து போயிற்று. இது தேவரீர் ஒருரு ப்ரஸாதித்தருளின கட்டளையிலே எழுதினேனென்று விண்ணப்பித்தனர்.

அதுகேட்ட நஞ்சீயரும் இவரது புத்திவிசேஷமிருந்தவாறென்னே! இவர் மிகவல்லுநராயிருந்தார்; நன்றாகவெழுதினுரென்று திருவுள்ள மிகவும் உகந்தருளி வரதராஜரை வாரியெடுத்தணைத்துக்கொண்டு இவர் நம்முடையபிள்ளை திருக்கலிகன்றி தாஸர் என்று திருநாமஞ்சாத்தி, தம்முடைய ஸந்நிதியிலே இறையும் பிரியாமல் வைத்துக்கொண்டு பிள்ளைக்கு எல்லாவர்த்தங்களையும் "கையிலங்கு நெல்லிக்கனி" யென்னலாம்படி ப்ரஸாதித்தருளினர். அவரும் "தேவுமற்றறியேன்" என்றவாறு ஜீயரையல்லது வேறு தெய்வமறியாராய் அவர் திருவடியே தஞ்சமெனவெண்ணி வழுவிலாவடிமைசெய்து வாழ்ந்திருந்தார். ஜீயர் நம்முடைய பிள்ளை யென்று அருளிச்செய்தவன்று தொட்டு வரதராஜருக்கு 'நம்பிள்ளை' யென்று திருநாமமாயிற்று.

நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை,
என்பாரவரவர்தம் மேற்றத்தால்—அன்புடையோர்
சாற்று திருநாமங்கள் தானென்று நன்னெஞ்சே
எத்தனைச் சொல்லி நீயின்று.

என்று ஸ்ரீமணவாளமாமுனிகள் அருளிச்செய்ததுங்காண்க.

பின்பழகிய பெருமாள் ஜீயரின் ஆசார்ய நிஷ்டை.

நஞ்சீயர் பக்கல்நின்றும் நம்பிள்ளை பக்கலிலே எல்லா வர்த்தங்களுங் குடிபுகுதலால் ஒரு தீபத்தினின்று மேற்றிய வேறு தீபம் போலே (4) தர்சனம் நிர்வஹித்தருளுவாராயினர். அதுகண்டு நஞ்சீயரும் (5) க்ருதக்ருத்யராயிருந்தருளினர். அப்பொழுது பிள்ளை திருவடிகளிலே பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை, பின்பழகியபெருமாள் ஜீயர், ஈயுண்ணிமாதவப்பெருமாள் முதலான அநேகம் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆச்ரயித்துப் பெரும்பேறடைந்

(4) தரிசனம்—ஸித்தாந்தம்; இங்கு எம்பெருமானர் தரிசனம்.
(5) க்ருதக்ருத்யர்—செய்கடன் முற்றியவர்.

திருந்தனர். இவர்களிலே பின்பழகியபெருமாள் ஜீயர் ஊனுறக்க மின்றிப் பிள்ளை திருவடிகளிலே வழுவிலாவடிமை செய்துகொண்டு வாழ்ந்தருளுவாராயினர் அங்ஙனம் நிகழுநாளிலே ஒருகால் ஜீயர் திருமேனிபாங்கின்றிக் கண்வளர்ந்தருளுகிறபொழுது தமக்கு அந்தரங்கரான ஸ்ரீ வைஷ்ணவர் சிலரை யழைத்து 'அடியேன் இப்போது திருவடிச்சாராமல் இங்கே இன்னும் சிறிதுகாலமிருக்கும்படி பெருமாள் ஸந்நிதியிலே சென்று (6) ஏழையேதலனும் (7) ஆழியெழச்சங்கும் விண்ணப்பஞ்செய்து ப்ரபத்திபண்ணி வேண்டிக்கொள்வீ'ரென்றருளினர். அவர்களும் அங்ஙனே செய்ய ஜீயருக்குத் திருமேனி பண்டுபோற் பாங்காயிற்று

இதைக்கேட்ட சில ஸ்ரீவைஷ்ணவர்கள், நம்பிள்ளை ஸந்நிதியிலே சென்று தெண்டனிட்டு (8) ஞானவிருத்தருமாய் வயோவிருத்தருமாயிருக்கும் பின்பழகியபெருமாள் ஜீயர் இவ்வாறு செய்தார்; இது இவர் ஸ்வரூபத்திற்குச் சேருமோவென்று விண்ணப்பஞ்செய்தனர். அதுகேட்டருளிய பிள்ளையும் அவர்களை நோக்கி அவருடையவுள்ளமறிகிலோம்; சகல சாஸ்திரங்களும் போருவது பிள்ளையெங்களாழ்வானுக்காம்; ஆதலால் அவர்பாற் சென்று கேளீரென்றனர், அவர்களும் எங்களாழ்வானைக் கேட்க; அவரும் ஸ்ரீரங்கைச்வர்யத்தில் ஆசைபோலும் என்றனர். பிள்ளையும் அதுகேட்டு, நன்று திருநாராயணபுரத்தரையரைச்சென்று கேளீரென்றனர். அவர்களும் அவரையடுத்துக்கேட்டபொழுது அவரும் துவக்கின கைங்கரியம் முற்றுப்பெறுமைபாற்போலுமென்றனர்.

---

(6) பெரியதிருமொழி 5—8. (7) திருவாய்மொழி 7—4.

"ஏழையேதலனில்" "பாடல்பத்திவை பாடுமின் றொண்டீர் பாடநும்மிடைப் பாவநில்லாவே" என்று பலங்கூறப்படுகையால் அதனால் அநிஷ்டநிவர்த்தியும், "ஆழியெழச்சங்கில்" "வென்றிதரும் பத்தும் மேவிக்கற்பார்க்கே"என்று பலங்கூறப்படுகையால் அதனால் இஷ்டப்ராப்தியும் ஸித்தித்தல் கருதி ஜீயர் இவ்வாறு நியமித்தருளினர். "ஆழியெழச் சங்கு" முதலிய பதிகங்களைத் தமது இஷ்ட ஸித்தியின் பொருட்டுப் புறச்சமயிகளான சாக்கியர் சமணர் முதலியோரும் அப்யஸிப்பர்கள். என்பர் ஈட்டின் அரும்பதவுரை காரர்.

(8) ஞானவிருத்தர்—அறிவினால் முதிர்ந்தவர்.

பிள்ளை இதனையுங்கேட்டு ஆகட்டும் அம்மங்கியம்மாளைக் கேளுங்க ளென்ன; அவரும் பிள்ளை கோஷ்டியிலிருந்தவர்களுக்குப் பிறிதொரு தேசம் ருசிக்குமோவென்றனர். பிள்ளை இதனையுங்கேட்டு நல்லதென்று பின் அம்மங்கிப்பெரியமுதலியாரைக் கேளுங்களென்றனர். அவரும் 'நம்பெருமாள் சிவந்த திருமுகமண்டலமும் கஸ்தூரித் திருநாமமும் பரமபதத்திற் காணேனாகில் ஒரு மூலை வழியே பொத்துக்கொண்டுவருவேன்' என்றன்றோ பட்டர் அருளிச்செய்தது; அவ்வாறே இவரும் அவ்விரண்டையும் விட்டுப் போக மாட்டாதவராகவேணுமென்றனர். பிள்ளை இவற்றையெல்லாம் திருவுள்ளம்பற்றியருளிப்பின் ஜீயர் திருமுகமண்டலத்தை நோக்கிச் சிரித்து உம்முடைய நினைவுக்கு இவையொக்குமோவென்று கேட்டருளினர். ஜீயர் இவையித்தனையு'மன்றென்றனர். ஆகில் உமது கருத்தையுரையீரென்று பிள்ளை பணித்தருள ஜீயர் விண்ணப்பிக்கிறார்.

எண்ணெய்க்காப்பு முறைகளிலே தேவரீர் திருமஞ்சனங் கண்டருளித் தூயவுடையாடை திருவுத்தரீயம் சாத்தியுலாவியருளும்போது குறுவியர்வோடுகூடின திருமுகமண்டல ஸேவையையும் சுற்றிச்சுழற்றிப் பணிமாறுகிற (9) திருவாலவட்டக் கைங்கர்யத்தையும் விட்டு அடியேனுக்குப் பரமபதத்துக்குப்போக இச்சையாயிருந்ததில்லை; இன்னஞ் சிறிதுகாலமிங்கேயிருந்து தேவரீருக்குக் கைங்கர்யம் பண்ணவேணுமென்று நினைத்துச் செய்தேனென்று விண்ணப்பஞ் செய்தார். பிள்ளையும் முதலிகளும் இதனைக்கேட்டருளி இவ்வுடம்போடே இவ்வைச்வர்யம் கூடுவதே என்று மிகவும் உகந்தருளினர்.

இங்ஙனமே "ஆசார்யன் சிஷ்யனுடைய உயிரை நோக்குமவன் சிஷ்யன் ஆசார்யனுடைய உடம்பை நோக்குமவனென்றும்", "ஆசார்யன் சிஷ்யனுடைய ஸ்வரூபத்தைப் பேணக்கடவன் சிஷ்யன் ஆசார்யனுடைய தேகத்தைப் பேணக்கடவன்; இரண்டும் இரு

9. திருவாலவட்டம்—விசிறி.

வர்க்கும் ஸ்வரூபமுமாய்ப் பகவத் கைங்கர்யமுமாயிருக்கும்'' என்றும் பூர்வர்கள் அருளிச்செய்வர். இம்முறையை,

ஆசாரியன் சிச்சனு ருயிரைப் பேணுமவன்
தேசாரும் சிச்சனவன் சீர்வடிவை—ஆசையுடன்
நோக்குமவனென்னு நுண்ணறிவைக் கேட்டுவைத்தும்
ஆர்க்குமஃநேர் நிற்கை யரிதாம்.

என்று பெரியஜீயரும் அருளிச்செய்வர். அன்றியும் "மாக வைகுந்தங் காண்பதற்கென்மனமேகமெண்ணும்'' என்றும், "வானுலகந்தெளிந்தேயென்றெய்துவது'' என்றும் எல்லாராலும் விரும்பப் படுமதான தேசத்திலும் விருப்பமற்று ஆசார்யனது திவ்யமங்கள விக்ரஹஸேவையும் கைங்கர்யமுமே பரமபுருஷார்த்தமாய்ப் பேணி நின்ற இவரது ஒப்புயர்வற்ற நிலையைப்பின்னும் பாராட்டுவாராய்,

"பின்பழகாராம் பெருமாள் ஜீயர் பெருந்திவத்தில்
அன்பதுவு மற்றுமிக்க வாசையினுல்—நம்பிள்ளைக்
கானவடிமைகள் செய்யந்நிலையை நன்னெஞ்சே
ஊனமற வெப்பொழுதுமோர்,

என்று பணித்தமை காண்க.

பின் ஒருநாள் நம்பிள்ளை பகவத்விஷயமருளிச்செய்து கோஷ்டி குலைந்த வளவில் பின்பழகியபெருமாள் ஜீயர் பிள்ளை திருவடிகளிலே தெண்டனிட்டு "இவ்வாத்மாவுக்கு ஸ்வரூப உபாய புருஷார்த்தங்கள் எவையென்று விண்ணப்பஞ் செய்தனர். பிள்ளையும் † இச்சை ஸ்வரூபம் * இரக்கம் உபாயம், ¶ இனிமை உபேயம் என்றருளிச்செய்தனர். ஜீயர் அதுகேட்டு அப்படியன்று அடி

---

† இச்சை ஸ்வரூபமென்றது எம்பெருமானுக்குச் சேஷபூதனுன ஆத்மாவுக்கு அவன் திருவுள்ளத்துக்கு உகந்த கைங்கர்யஞ்செய்து கிடக்கையே ஸ்வரூபம். இச்சை—விருப்பம்; எம்பெருமான் திருவுள்ளமுகக்கை யென்றபடி.

* இரக்கமுபாயமென்றது "அதுவுமவன தின்னருளே'' என்றபடி சேதனன் செய்யும் ப்ரபத்தியும் அவனதருளோடு கூடாதபொழுது உபாயமாகாதொழிதலால் என்க. சரண்யாபிமத மின்மையால் பரதன்செய்த ப்ரபத்தியும் உபாயமின்றி யொழிந்தமை காண்க.

¶ இனிமையுபேயமென்றது "படியாய்க் கிடந்துன்பவளவாய் காண்பேனே'' என்றபடி சேதனன் அசித்துப்போற் பாரதந்த்ரனுய்க்கிடக்கு நிலை

யேன் நினைவு என்றனர். பிள்ளையும் அதுகேட்டருளி உமக்கென்று சில பிள்ளைக்கிணறுகளுண்டோ? நீ ரெங்ஙனே நினைத்திருப்பது அதனைச்சொல்லீரென்ன, ஜீயரும் தேவரீர் அருளிச்செய்தபடியே நினைத்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமையாயிருப்பதே அடியேனுக்கு ஸ்வரூபம்; அவர்களுடைய அபிமானமே அடியேனுக்கு உபாயம்; அவர்களது முகமலர்ச்சியே அடியேனுக்கு உபேயமென்று நினைத்திருப்பன் என்று விண்ணப்பஞ் செய்தனர். பிள்ளையும் அதுகேட்டு மிகவும் மகிழ்ந்தருளினர்.

லோகாசாரியரென்ற திருநாம வரலாறு.

ஒருகால் பிள்ளை பகவத்விஷய மருளிச்செய்து கோஷ்டி குலைந்துசெல்லும் பெருந்திரளைக்கண்டு வைஷ்ணவனாகிய ஓரரசன் நம்பெருமாள் திருவோலக்கம் குலைந்ததோ நம்பிள்ளை கோஷ்டி கலைந்ததோவென்று கேட்டானென்று கூறுவதுண்டு.

இப்படி நிறைவுற்ற ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயுடன் நம்பிள்ளை வாழ்ந்தருளுநாளிலே, முதலியாண்டான் திருப்பேரனாரும் கந்தாடையாண்டான் குமாரருமான கந்தாடைத்தோழப்பர், பிள்ளையது பெருமதிப்பையும் வைபவத்தையுங்கண்டு பொறாதவராயிருந்தனர். அவர் ஒருநாள் பெருமாளை ஸேவித்துக் கொண்டிருந்தபொழுது பிள்ளை பெருந்திரளுடன் பெருமாளை ஸேவிக்கக் கோயிலினுள்ளே யெழுந்தருளினர். அதுகண்டு தோழப்பர் பிள்ளையைச் சீறி வெகுவாய்க் கடுஞ்சொற்களைச் சொல்லி நிந்திக்கலாயினர். பிள்ளையும் அதுகேட்டு நடுக்கமுற்றுப் பெருமாளை ஸேவித்து

கண்டு எம்பெருமான் முகமலர்ச்சிகொள்ள அதனால் மகிழ்கையே பலமாமென்றவாறு. இனிமை—அவனதின்ப மகிழ்ச்சி.

பிள்ளைக்கிணறுவது — கிணற்றுக்குள் தோண்டப்பட்ட சிறுகிணறு. துலைச்சால் நன்கு முகக்கும் பொருட்டு அமைக்கப்படுவது. இதனைத் துலைக்குழியென வழங்குவர். உமதறிவு முகத்தற்கென்று நூலாழங்கள் (நூல்நுட்பங்கள்) வேறு சிலவுண்டோவென்று ஜீயரது அறிவின்றிறத்தை வியந்தவாறு.

வெளியே யெழுந்தருளினர். தோழப்பரது ஞானமிக்கதேவியார் இது தெரிந்து மிகவருத்தமுற்றுத் திருமாளிகையிற் செய்கிற கைங்கர்யங்களையும் செய்யாது வெறுப்புடன் எழுந்தருளியிருந்தனர். பெருமாளை ஸேவித்துமீண்டு தம் திருமாளிகைக் கெழுந்தருளிய தோழப்பர் தம் தேவிகள் வழக்கம்போல எதிர்கொண்டு வந்து அன்புடன் ஒரு கைங்கர்யமும் செய்யாமை கண்டு அவரை நோக்கி 'நாம் அங்கீகரித்த அன்று தொட்டங்கி நம்பால் ஆசார்ய ப்ரதிபத்தி பண்ணிவந்த நீ இன்று இப்படியிருக்கக் காரணமென்?' என்று கேட்டருளினர். அப்போது தேவிகளும் தோழப்பரை நோக்கி வாரீர்! ஆழ்வாருடைய திருவவதாரமென்னுமாறு பெருமாளுக்கு உயிர்நிலையான நம்பிள்ளையைப் பெருமாள் ஸந்நிதியிலே பல இகழ்ந்துரையாடி நிந்தித்து 'இது செய்தோமே' என்கிற கழிவிரக்கமுமின்றியேயிருக்கிற உம்மோடெனக்கென்ன தொடர்புண்டு; நீர் என்னை வெறுத்தீராகில் என்னுடைய பெற்றோர்களால் உமது கையிற் காட்டித் தரப்பட்ட இந்த உடலத்தை நீர் வேண்டினவாறே செய்துகொள்ளும்; எங்களாசார்யர் என்னுத்மாவை அங்கீகரித்தருளினவன்றே நான் பிழைத்துப்போனேன். ஆனபின்பு * "பத்மகோடி சதேநாபி நக்ஷமாமி கதாசந" என்று பாகவத நிந்தனைபண்ணினவரை யொருபொழுதும் பொறுப்பதில்லையென்று பெருமாளருளிச்செய்ததறிந்தும் அறியாதார் போன்றிருக்கிற உம்மோடு உடனுறைதல் கூடாது; நிலம் பிளந்தால் இழையிடவும் கடலுடைந்தாற் கரைகோலவும், மலை முறிந்தால் தாங்குதலும் முடியாதவாறுபோலப் பாகவதாபசாரம் பரிகரிக்கக்கூடாததொன்றன்றோ! ஆதலால் என்னிஷ்டம்போலிருந்து ஈடேறிப் போகிறேனென்று கூறினர்.

தோழப்பரும் தேவிகள் வார்த்தைகேட்டுச் சிறிது திகைத்துத் தமது பெரும்புலமையாலும் வம்சத்தின்பெருமையாலும் பொரூமையால்வந்த திருவுள்ளக்கலக்கம் நீங்கித் தேவிகளைநோக்கி நீ சொன்ன

---

* கதாசந—ஒருகாலும், பத்மகோடி சதேநாபி—பத்மமென்ற எண்ணில் நூறுகோடி வருஷங்களிலும் (என்னையாராதித்தாலும்) நக்ஷமாமி—பொறுக்கமாட்டேன். (வாராஹபுராணம்.)

வெல்லாமொக்கும்; நாமே தவறு செய்தோம்; இனிச் செய்வதென் எனத் தேவிகளும் ஆற்றிற்கெடுத்துக் குளத்தினில் தேடுவாருண்டோ! கெடுத்தவிடத்திலேயன்றோ தேடவேண்டும்; ஆதலால் பேரருளாளரான பிள்ளை திருவடிகளிலேசென்று தெண்டனிட்டு பிழைபொறுத்தருளுமாறுவேண்டி அவர் க்ருபையால் ஈடேறுவீர் என்றனர்.

தோழப்பர் அதுகேட்டு அவரைப்பெருமாள் திருவோலக்கத்தில் அவமானம் பண்ணிவிட்டு இப்பொழுது அவர் ஸந்நிதியிலே போய் நிற்கவெனில் எனக்கு அச்சமும் நாணமும் பின்பற்றுகின்றன; ஆதலால் நீயுமுடன்வந்து க்ஷமிப்பிக்கவேணுமென்றனர். தேவிகளும் அதுகேட்டு அப்படியேயென்று கடுகவெழுந்து அவரையுங் கூட்டிக்கொண்டு பிள்ளை திருமாளிகைக்கெழுந்தருளுவதாகப் புறப்படுவோராயினர். பிள்ளை, கோயிலினின்று எழுந்தருளி முதலிகளெல்லாரையும் அனுப்பிவிட்டுப் பகல் முழுதும் அமுது செய்யாமல் தம் திருவாளிகையினுள்ளேயிருந்து மாலைப்பொழுதில் அநுஷ்டானங்களைமுடித்து ஒற்றைப் † பரிவட்டத்துடன் முட்டாக்கிட்டுக்கொண்டு தனியே யெழுந்தருளித் தோழப்பர் திருமாளிகை வாசலிலே ஒட்டுத் திண்ணையில்வந்து கண்வளர்ந்தருளினர். பிள்ளையின் திருமாளிகைசெல்லக்கருதி விளக்குடன் வெளிப்போந்தவர்கள் திண்ணையில் வெண்மைகண்டு இது யாரென்றுகேட்க பிள்ளை 'அடியேன் திருக்கலிகன்றிதாஸன்' என்றனர். அதுகேட்டுத் தோழப்பர் திகைப்புற்றுப் பிள்ளையைநோக்கி 'மிக்க தேசுடைய நம்மை நம்பெருமாள் திருவோலக்கத்தில் அவமானம் செய்வதென்? என்கிற கோப மிகுதியால் மூர்க்கஞ் செய்வதாக நம்வாசலில் வந்து கிடக்கிறீரோ வென்றனர். அதற்குப்பிள்ளையும் 'அடியேன் அப்படி வரவில்லை; பெரியபெருமாள் ஸந்நிதியிலே முதலியாண்டான் திருப்பேரனான தேவரீர் திருவுள்ளங்கலங்குமாறு செய்த பாபியான அடியேனுக்குத் தேவரீர் திருமாளிகை வாசலல்லது புகலிடமின்றி வந்து கிடக்கிறேன்' என்றருளிச்செய்தனர். தோழப்பர் அவரது தாழ்மையான மொழிகளைக்கேட்டு 'ஈதோரதிகாரமிருந்தவாறென்னென்று மிகவும் ஈடுபட்டவராய்ப் பிள்ளையை வாரியெடுத்தணைத்துக்கொண்டு இத்தனை நாளாய் நீர் சிலருக்கே ஆசார்யரென்

† பரிவட்டம்—வஸ்த்ரம்.

திருந்தேன்; இப்பொழுது உலகுக்கெல்லாம் நீரே ஆசார்யரென் றறிந்தேன் என்றருளிச்செய்து பிள்ளைக்கு § லோகாசாரியர் என்று திருநாமஞ் சாத்தியருளித் தம் திருமாளிகையினுள்ளே யழைத்துச் சென்று தாமும் தேவிகளுமாக அவர் திருவுள்ள முகக்கும்படி பல வாறுபசரித்து வேண்டிய அர்த்த விசேஷங்கள் பலவுங்கேட்டுப் பிள்ளை திருவடிகளிலே மிகவும் பற்றுடையராய்ப் பெரும்பேறடைந் தருளினர்கள். இவ்வரலாற்றினை,

> துன்னுபுகழ்க் கந்தாடைத் தோழப்பர் தம்முகப்பால்
> என்னவுல காரியனோ வென்றுரைக்கப்—பின்னை
> உலகா ரியனெனும்பேர் நம்பிள்ளைக் கோங்கி
> விலகாமல் நின்றதென் று மேல்.

என்று ஸ்ரீமணவாளமாமுனிகள் அருளிச்செய்ததுங் காண்க.

(தொடரும்.)

ரெ. இராமையங்கார்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல்
மதுரை.

---

§ தோழப்பர் தம்பால் நம்பிள்ளைசெய்த நைச்சியங்கண்டு இவ்வாறரு ளிச்செய்தார். இந்த நைச்சியத்தினால் இவரை லோகாசாரியரென்றல் கூடுமோவென்னில்; ஆசாரியனாவான் "கற்க கசடறக்கற்பவை கற்றபின், நிற்கவதற்குத்தக" என்றபடி சகல கலைகளையுங்கற்றுணர்ந்து அவற்றிற் கேற்ப வொழுகிப் பிறரையும் அவ்வாறு செய்விக்கும் இயல்பினன்.

"அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கடியாரடியார் தம் அடியாரடி யோங்களே" என்றபடி அடியார்க்கடிமையாதலும் அவர் பால் அபசாரப்படா மையும் ஸ்வரூபத்தின் எல்லை நிலங்களாம் என்பது நூல் முடிவு. தோழப்பர் பெருமாள் ஸந்நிதியிற் செவிகைப்பப் பேசிப் பிள்ளைபக்கல் அபசாரப்பட்ட மையை க்ஷமிக்குமாறு அவரைப் பிரார்த்திக்கச் செல்லவெழுந்தபொழுது, நம்பிள்ளை தாம் தோழப்பர் பால் அவர் திருவுள்ளங் கலங்குமாறுசெய்து அபசாரப்பட்டோம் என்று அதைப்போக்கிக் கொள்ளும்பொருட்டுத் தோழப் பர் திருமாளிகை வாசலிலேவந்து வரங்கிடந்தனர். அதுகண்ட தோழப்பர் ஸாரதமசாஸ்திரத்திற்கண்ட அறிவொழுக்கங்கள் இவர் பாலன்றோ தேங்கி யுள்ளது. இதனால் தலைசிறந்த ஆசார்யத்வம் இவர்க்கேயுளதாம் என்று கருதி இனி நீர் உலகத்திற்கெல்லாம் ஆசார்யராவீர் என்றருளிச் செய்தனர்.

"இத்தால் இவர் லோகாசார்யத்வம் கூரகுலத்திலவர்களும் வாதூலவம்ச் யரும் அநுவர்த்தித்து ஆச்ரயித்தபோதே ஸர்வ லோக ஸம்ப்ரதிபந்ந மென்ற தாய்த்து" என்று பிள்ளை லோகம் ஜீயர் அருளிச்செய்வதுங் காண்க. (உப தேசரத்தினமாலை யுரை.)

ஸ்ரீ:

திருக்குறள்.

கடவுள் வாழ்த்தாராய்ச்சி.

முன்னர், "திருவள்ளுவர் சமயம்" என்ற விஷயத்தில் 'கடவுள் வாழ்த்து' அதிகாரந்தொடங்கிப் பல வதிகாரங்களிலுள்ள திருக்குறள்களை எடுத்துக்காட்டி அவரது சமயம் இன்னதென்று நிறுவப்பெற்றது, இங்குக் கடவுள்வாழ்த்ததிகாரத்தில் முதற்குறளில் ஆறுகுணங்களையுடைய இறைவனென்றும், ஒன்பதாவது குறளில் எண்குணங்களையுடைய கடவுளென்றும் குறிப்பிடப்பெற்றமையான் இந்த இரண்டு குறள்களும் உய்த்துணர்தற்கு இன்றியமையாத விஷயமாயிருக்கும்.

ஓரதிகாரத்தில் முன்னர், அறுகுணங்களையுடைய இறைவனென்றுரைத்துப் பின்னர் எண் குணங்களையுடையனென்று நவில்தற்குக் காரணம் யாதென்றும், அறுகுணங்களையுடையவனே எண் குணங்களையுடையனுமிருப்பானென்பதா? அல்லது அறுகுணங்களையுடையவன் வேறு எண்குணங்களையுடையவன் வேறென்பதா? என்றும், ஓரதிகாரத்தில் தொடங்கியதற்கேற்ப முடிவில் ஒற்றுமையுற்றிராததற்குத் தக்கசான்றுகள் வேண்டுமேஎன்றும் பல வினுக்களெழும். ஆகலால் இங்கு "அகரமுதல" என்ற குறளும், "கோளிலபொறியில்" என்றகுறளும் ஆராய்ச்சிக்கு முக்யமாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

"அகரமுதல" என்றகுறளில் இறைவனது உண்மையுரைக்கும் முகத்தான் அவனது தலைமையையும் விளக்கினர். இங்ஙனம் தலைவனுயிருக்கின்ற இறைவன் திருவடியையே உபாயமாகப்பற்றி உய்யவேண்டுமென்று பின்னுரைக்கப் பெறுதற்குத் தோற்றுவாயாக அவ்விறைவன் குணபூர்த்தியுடையவனென்பதை பகவச் சப்தத்தாற் கூறினர். அடைக்கலம் புகுகின்றவன் குணபூர்த்தியில்லாத வஸ்துவைப் பற்றுவானேல் அவன் காரியஸித்தியடையான்.

ஸ்ரீராமபிரான் வருணனைச் சரண்புக்கதும், தசரதன் பரசுராமனை அடைக்கலம் புகுந்ததும் பலியாதொழிந்தமையறியலாம்.

முதற்குறளிலுள்ள பகவச் சப்தமானது ஜ்ஞானம், சக்தி, பலம் ஐசுவர்யம், வீர்யம், தேஜஸ் என்ற ஆறுகுணங்களையுங் குறிப்பிடும். இவ்வறுகுணங்களையுடையவன் பகவனென்பது போதரும். இறைவனுக்கு எண்ணிறந்த குணங்களுள்ளன. அவற்றுள்ளும் முக்யமாயிருப்பன இவ்வாறு குணங்களாதலால் இவற்றைச் சுட்டி யுணர்த்தினர். மேலும் அவனுடைய கணக்கற்ற குணங்களை இரண்டு வகையாகப் பிரித்துணர்த்துவார்கள். அவையாவன பிறர்க்குபயோகப்படுங்குணங்கள், தன்னியல்பை விளக்குங்குணங்களென்பன. பிறருக்குபயோகப் படுங்குணங்களுள் § வாத்ஸல்யாதி குணங்களை ஸர்வேசுவரன் அநுகூலராகிய அடியவர்கள் விஷயத்தில் உபயோகப்படுத்துகிறான். பராக்ரம முதலிய குணங்களை அடியவர்கட்கு விரோதிகளாகிய சத்ருக்கள் விஷயத்தில் உபயோகப்படுத்துகிறான். இதனால் வாத்ஸல்யாதி குணங்கட்கும், பராக்ரமமுதலிய குணங்கட்கும் முறையே அநுகூலரும், பிரதிகூலரும் விஷயமாவார்களென்பது விளங்கும். இந்த ஜ்ஞானமுதலிய ஆறுகுணங்கட்கும் அநுகூலர் பிரதிகூலர் என்ற வேறு பாடில்லாமல் எல்லோரும் விஷயமாவர்களாதலால் இக்குணங்களை முற்கூறினரென்றுங் கொள்ளலாம்.

அடைக்கலம்புகுமவன் தனக்குள்ள விரோதியையறிந்து போக்கி நற்பலனைத் தருதற்குரிய அறிவாற்றல் முதலிய குணங்களையுடையவனையே அடைவானென்பது ஒருதலையன்றோ! அம்முறைவிளங்க முதற் குறளில் பகவச் சப்தத்தாற் கூறினரென்பதும் பொருத்தமுடையதே.

இனி, ஜ்ஞாநமுதலிய ஆறுகுணங்கட்கு எல்லோரும் விஷயமாவார்களென்பதை விளக்க முன்பு அவ்வறு குணங்களின் பொருளுரைக்கப்பெறும்.

---

§ வாத்ஸல்யமாவது—பசு தானீன்ற கன்றின் வழும்பை இனிமையாகக் கொள்வதுபோல இறைவன் தன்னடியாரிடத்திலுள்ள குற்றங்களைக் குணமாக் கொள்வதாம்.

(1) ஜ்ஞாநமாவது—எப்பொழுதும் எல்லாவற்றையும் தெளிவாக விளக்கக்கூடியதாயும், தனக்குத்தானே பிரகாசமாயுமுள்ள குணவிசேஷம்.

(2) சக்தியாவது—ஜகத்காரணமாயிருக்கின்ற குணவிசேஷமாதல், அகடிதகடநாஸாமர்த்யமாதல், (சேராதவற்றைச்சேர்ப்பது)

(3) பலமாவது—எல்லா வஸ்துக்களையும் தாங்கும் ஸாமர்த்யம்.

(4) ஐசுவர்யமாவது—எல்லாவற்றிற்கும் கர்த்தாவாயிருத்தலின் லக்ஷணமான ஸ்வாதந்தர்யம் அல்லது எல்லா வஸ்துக்களையும் நியமிக்கும் ஸாமர்த்யம்.

---

(1) 𑌅𑌜𑌡𑌂 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌸𑌂𑌬𑍋𑌧𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌵𑌗𑌾𑌹𑌨𑌂 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮𑌗𑍁𑌣𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌂 𑌗𑍁𑌣𑌚𑌿𑌨𑍍𑌤𑌕𑌾𑌃 ॥

அஜடம்ஸ்வாத்ம ஸம்போதி நித்யம் ஸர்வாவகாஹ நம்
ஜ்ஞாநம் நாமகுணம் ப்ராஹு: ப்ரதமம் குணசிந்தகா:

(இ-ள்) குணத்தைச் சிந்திக்குமவர்கள் முதலில் ஜ்ஞாநமென்று பிரவித்தமான குணம் அஜடமாயும், தன்னைத்தானே அறிகிறதாயும், நித்யமாயும், எல்லா விஷயங்களையும் பிரகாசிப்பிப்பதாயுமிருக்குமென்று சொல்லுகிறார்கள், எ-ம்.

(2) 𑌜𑌗𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌭𑌾𑌵𑍋 𑌯𑌸𑍍𑌸𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌤𑌿𑌤𑌃

ஜகத் ப்ரக்ருதிபாவோ யஸ்ஸசக்தி ப்ரகீர்த்தித:

(இ-ள்) ஜகத்திற்குக் காரணமாயிருப்பது யாதொன்றுண்டோ அது சக்தி என்று சொல்லப்படும்; எ-ம்.

(3) 𑌬𑌲𑌂 𑌧𑌾𑌰𑌣𑌸𑌾𑌮𑌰𑍍𑌥𑍍𑌯𑌂

. பலம்தாரண ஸாமர்த்யம்.

(இ-ள்) பலமாவது—எல்லாவற்றையும் தாங்கும் ஸாமர்த்யம்; எ-ம்.

(4) 𑌕𑌰𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌨𑌾𑌮 𑌯𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌪𑌰𑌿𑌬𑍃𑌂𑌹𑌿𑌤𑌂 ।
𑌐𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌂 𑌨𑌾𑌮 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌗𑍁𑌣𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌚𑌿𑌨𑍍𑌤𑌕𑍈𑌃 ॥

கர்த்ருத்வம் நாமயத்தஸ்ய ஸ்வாதந்தர்ய பரிப்ரும்ஹிதம்
ஐசுவர்யம் நாமதத்ப்ரோக்தம் குணதத்வார்த்த சிந்தகை:

(5) வீர்யமாவது—ஜகத்திற்குபாதான காரணமாயிருந்தும் ஸ்வரூபவிகாரமில்லாதிருக்கும்அவிகாரதை. (விகாரமில்லாதிருத்தல்)

(6) தேஜஸ்ஸாவது—ஸஹாயத்தை யபேக்ஷியாதிருத்தல்.

ஸர்வேசுவரன் இந்த ஜ்ஞாநமுதலிய ஆறுகுணங்களையுடையவனாயிருந்தே அநுகூலரக்ஷணத்தையும், பிரதிகூல நிரசனத்தையும் (அழித்தலையும்) செய்யவேண்டியதாயிருப்பதால் இவ்வாறு குணங்கட்கு எல்லாரும் விஷயமென்று சொல்லப்பட்டது.

இத்துணையுங் கூறியவாற்றால், விரோதியைப் போக்கி இஷ்டங்களைத் தருதற்குரிய அறிவாற்றல் முதலிய குணங்கள் இறைவன் பாலுள்ளன என்றுணர்த்தாவிடின், புகலற்றவர்கள் சம்சயமற்று அவன்றிருவடியைத் தஞ்சமாகப் பற்றவேண்டுமென்ற உணர்ச்சி அவர்கட்குத் தோன்ருதென்பது ஒருதலையாதலால் முதற்குறளில் ஆறுகுணங்களையுடையனென்று கூறினரென்பது பெறப்பட்டது. இதனல் முன்னர்த்தெரிவித்தவாறு இருவகைப்பட்ட இறைவனது குணங்களில் இங்குப் பிறருக்குப யோகப்படுங்குணங்களைச் சுட்டியுணர்த்தினரென்று கொள்ளத்தக்கது.

(இ-ள்) அந்த பரமாத்மாவுக்கு ஸ்வாதந்த்ர்யத்தோடுகூடின யாதொரு கர்த்தாவாயிருக்குந்தன்மை பிரசித்தமாயிருக்கிறதோ அது, குணங்களின் உண்மையறிந்தவர்களாலே ஐசுவர்யமென்ற பிரசித்தமான குணமாகச் சொல்லப்பட்டது.

(5) 𑌤𑌸𑍍𑌯𑍋𑌪𑌾𑌦𑌾𑌨 𑌭𑌾𑌵𑍇𑌽𑌪𑌿 𑌵𑌿𑌕𑌾𑌰𑌵𑌿𑌰𑌹𑍋 𑌹𑌿𑌯𑌃।
𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌨𑌾𑌮 𑌗𑍁𑌣𑌸𑍍𑌸𑍋𑌽𑌯𑌂 𑌅𑌚𑍍𑌯𑍁𑌤𑌤𑍍𑌵𑌾𑌪𑌰𑌾𑌹𑍍𑌵𑌯𑌃॥

தஸ்யோபதாநபாவேபி விகாரவிரஹோஹிய:
வீர்யம் நாமகுணஸ்ஸோயம் அச்யுதத்வாபராஹ்வய:

(இ-ள்) ஸர்வேசுவரனுக்கு ஜகத்துக்குபாதானகாரணமாயிருக்கும் நிலைமையிலேயும் விகாரமின்மையிருக்கின்றது. இங்ஙனமிருக்கின்ற அந்த அவிகாரத்வமானது வீர்யமென்ற ப்ரஸித்தமான குணமாகச்சொல்லப்படும். அதுவே அச்யுதமென்ற வேறு பெயராலும் வழங்கப்பெறும்; எ-ம்.

இனி, இறைவன்றன்னியல்பைத் தெரிவிக்கும் குணங்களையும் விளக்கியுரைக்கவேண்டிய கடமையுண்டாதலால் இரண்டாவது குறள் தொடங்கி பலகுறள்களால் இறைவன் திருவடியையே தஞ்சமாகப் பற்றவேண்டுமென்று பன்முறையும் வற்புறுத்திக்கூறி முடிவில் எண் குணத்தானென்று தெரிவித்தார். இந்த எண் குணங்களே அவன்றன்னியல்பை விளக்குகின்ற குணங்களாமென்றறியத் தக்கது. எண் குணங்க்ளாவன.— "𑌅𑌪𑌹𑌤𑌪𑌾𑌪𑍍𑌮𑌾 * 𑌵𑌿𑌜𑌰𑍋 𑌵𑌿𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌵𑌿𑌶𑍋𑌕𑍋 𑌵𑌿𑌜𑌿𑌘𑌤𑍍𑌸𑍋𑌽𑌪𑌿𑌪𑌾𑌸𑌃 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌃 𑌸𑌤𑍍𑌯𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌃" "அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யு: விசோகோ விஜிகத்ஸோ பிபாஸ: ஸத்யகாமோ ஸத்யஸங்கல்ப:" என்பனவாம். இவற்றின்பொருள்: பாபமின்மை, நரையின்மை மரணமின்மை சோகமின்மை பசியின்மை தாகமின்மை ஸத்யகாமம் ஸத்யஸங்கல்பம் என்பன.

இன்னும் "கோளில் பொறியில்" என்ற குறளிற்கு முன்னுள்ள எட்டுக்குறள்களுள் முதற்குறள் நீங்கலாக ஏனைய குறள்களை ஆராய்வோமாகில் இந்த எட்டு குணங்களும் அவற்றில் பொதிந்துள்ளமையறியலாம். இரண்டாவது குறளாலும் மூன்றாவது குறளாலும் சொல்லப்பட்ட "நற்றாள்" "மாணடி" என்ற பதங்கள் லக்ஷணையால் அப்ராக்ருததிவ்ய மங்கள விக்ரஹத்தையுடையவனென்ற பொருளைத்தரும். இதனால் நரையின்மை பெறப்பட்டது. அப்ராக்ருதவடிவு ஒளியுடையதாயும், ஒருபடிப்பட்டதாயுமிருக்குமாதலால் அதற்கு நரையென்பதில்லை. நான்காவது குறளில் "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்றதனால் பாபமின்மையறியலாகும்.

---

* அபஹதபாப்மா என்பதற்குப் போக்கடிக்கப்பட்ட பாபத்தையுடையவனென்று பொருள்கொள்ளக் கிடக்கிறது. இங்ஙனங்கொண்டால் ஒரு காலத்தில் அவனிடத்தில் பாபமிருந்து பின்னர் நீங்கியதென்றுகொள்ளவும் கூடும். அதனால் அபஹதபாப்மா என்பதற்கு ஒட்டாத பாபத்தையுடையவன் என்று பொருள் கொள்ளத்தக்கது. இதனால் நமக்குப் பாபங்களாயிருப்பனவற்றை அவன்செய்யும்படி நேரிட்டாலும் அவற்றின் பலன்களவனை அண்டமாட்டாவென்பதும் அவையணுகாதிருப்பதற்குத் தடையாயிருக்கும் சிறந்ததோரியல்பு அவன் பாலுண்டென்பதும் பெறப்பட்டன.

விருப்பு வெறுப்புக்களே பாபம் விளைதற்குக் காரணமாகும். இவையிரண்டும் இல்லாதவனெனவே அவன் இயல்பாகவே பாபங்களினின்று நீங்கினவனென்பது போதரும். ஐந்தாவது குறளில் "இறைவன்பொருள்சேர்புகழ்" என்றதனுன் ஸத்யகாமம் ஸத்யஸங்கல்பம் என்ற இரண்டும் விளங்கும். ஸத்யகாமமாவது—பழுதடையாத இச்சை. ஸத்யஸங்கல்பமாவது. பழுதடையாத நினைவு—ஜீவன் கர்மவசப்பட்டவனாதலால் இவனது இச்சையும், நினைவும் பழுதுற்றனவாயிருக்கும். இறைவன் கர்மவசப் படாதவனாதலால் அவனதிச்சையும், ஸங்கல்பமும் ஸத்யமுடையனவாயிருக்கும். இவற்றை மெய்ம்மைசேர்ந்த புகழென்றுரைக்கலாம். ஆறுவது குறளில் "பொறிவாயிலைந் தவித்தான்" என்றதனுல் பசியின்மை, தாகமின்மை, சோகமின்மை, மரணமின்மை என்ற நான்கு குணங்களுமறியலாகும். பசிதாகமிருந்தாலன்றோ அவற்றை அகற்றிக் கொள்ளப் § புலன்களைமேயப் † பொறிகள் செல்லும். இவை (பசிதாகம்) இல்லாதவனாதலால் பொறிவாயிலைந்தவித்தவனானன். பசிதாக மற்றவனெனவே இவைகாரணமாகவருகிற சோகமற்றவனென்பது தன்னடையே விளங்குகிறது. உண்ணுஞ்சோறும் பருகுநீரும் பசிதாகங்களையகற்றித் தேகத்தை வளரச்செய்கின்றன. இவையில்லாவிடின் தேகம்தேயும். அதனுன் மரணமுண்டாம். அவன் பசிதாகமில்லாதவனெனவே உணவுப்பொருள்களை உட்கொள்ளாதவனென்பதும், அதனுல் வளர்தல்தேய்தல் அற்றவனென்பதும், அதனுல் மரணமில்லாதவனென்பதும் புலனுகின்றன.

முதற்குறளால் பெறப்பட்ட ஆறுகுணங்களையும், ஏனை ஐந்து குறட்களால் குறிப்பாற் பெறப்பட்ட எண் குணங்களையுமுடையவனே தனக்கொரு வாற்றுனு மொப்பற்றவனுயும், தர்மஸ்வரூபியாயுமிருப்பானென்பதை எட்டு ஒன்பதாவது குறட்களால் "தனக்குவமையில்லாதான்" என்றும் "அறவாழியந்தணன்" என்றும் உணர்த்தினர். ஒன்பதாவது குறளினுல் முன் குறிப்பாற்பெறப்

---

§ புலன்களாவன: சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பன.

† பொறிகளாவன: மெய் வாய் கண் மூக்கு செவி என்பன.

பட்ட எண் குணங்களைத் தெளிவாக "எண் குணத்தான்" என்று சுட்டியுணர்த்தினர்.

இன்னும் முன்னர் ஆறு குணங்களையுடையனென்று விளக்கி இறுதியில் எண்குணமுடையனென்றுரைத்ததனால் ஓர் குறிப்புப் பொருளும் தோன்றுகிறது. அஃதாவது உலகினர்க்குள்ள விரோதியைப் போக்கி இஷ்டத்தைத் தருவதற்கு அறிவாற்றல் முதலிய குணங்களையுடையவனாகிய இறைவன்றன் திருவடியைத் தஞ்சமாகப் பற்றியவர்கட்கு அவன் தன்னையொக்க வருள்செய்பவனாதலால் எண்குணங்களையும், முடிவிலாநந்தத்தையும் கொடுப்பானென்பதாம். ஜீவன் முக்தனாயிருக்கும் நிலையில் எண்குணங்களையுடையவனாய் விளங்குகின்றானென்பது நூன்முடிபு.

இன்னும் இந்தக் "கோளில் பொறியில்" என்ற குறள் இந்தக் குறிப்புப்பொருளைத் தருகிறதென்பது தெளிவாக ஆராய்ந்துரைக்கப்பெறும்.—

இரண்டாவது குறளில் "நற்றாள் தொழாஅர்" என்றும், மூன்றாவது குறளில் "மாணடிசேர்ந்தார்" என்றும், நான்காவது குறளில் "வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்கு" என்றும், ஏழாவது குறளில் "தனக்குவமையில்லாதான்றாள் சேர்ந்தார்க்கு" என்றும், எட்டாவது குறளில் "அறவாழியந்தணன்றாள் சேர்ந்தார்க்கு" என்றும் இறைவன்றன் திருவடியை அடைதலாகிய தொழிலையுடையார்மே லேற்றிக்கூறினர். ஒன்பதாவதுகுறளில் மாத்திரம் "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான், தாளை வணங்காத்தலை" என்று இறைவனது அடியை வணங்காத தலைகள் பயனுடையவல்ல என்று அவயவத்தின் மேலிட்டுக்கூறினர். இங்ஙனங் கூறுதற்கு முக்யமான ஓர் கருத்திருத்தல் வேண்டும். அது வருமாறு:—

அறப்பெரிய பயனைப்பெறுதற்கு யோக்யதையுடையார் அப்பயனைப்பெறாது இழந்திருப்பரேல் இவர்களைக் கண்டவிடத்துப் பெரியார்கட்கு வெறுப்புண்டாவது இயல்பு. அதுபோல இங்கு இறைவன் திருவடியை உபாயமாகப்பற்றி அதனால் முடிவிலாநந்தத்

தையும், எண்குணங்களையும் பெற்று வாழ்வதற்கு யோக்யதையுடையவராயிருந்து வைத்தும் அதைப்பெறு திருப் பவரைக்கண்டு வெறுப்புற்று அவரைச் சுட்டியுரைப்பதற்குமனமில்லாதவராய் அவர்தம் அவயவத்தின்மேலிட்டு "எண்குணத்தான்றாளை வணங்காத்தலை கோளில் பொறியிற் குணமில" என்றுரைத்தார். இதனால் எண் குணத்தான் தாளைவணங்கியவர்கள் தாமும் எண் குணத்தையுடையவராய்ச் சுகமாக வாழலாமென்ற குறிப்புப்பொருள் விளங்குவதை நன்கறியலாம்.

"பிறவிப்பெருங்கடல்" என்ற குறளே இறுதிக்குறளாகவிருக்கினும், அது நியமார்த்தத்தை விளக்க வந்ததேயன்றிச் செய்தியுரைக்கவந்ததில்லை. நியமார்த்தமாவது—முன்னர்ப் பெறப்பட்டதை வற்புறுத்துவதற்குப் பின்னரும் அதனையே சுட்டியுரைப்பதாம் செய்தியுரைக்கவந்த குறள்களில் "கோளில் பொறியில்" என்ற குறளே இறுதிக்குறளாதலால் இதுவே இறுதிப்பாடலாகவுரைக்கலாயிற்று.

இதனால் முதற்குறளினாற் கூறப்பட்ட ஆறுகுணங்கள் பிறருக்குபயோகப்படுங் குணங்களென்றும், இறுதிக்குறளினாலுரைக்கப்பட்ட எண்குணங்கள் இறைவன்றன்னியல்பைக் காட்டுங் குணங்களென்றும் பொருள்கூறினமையால் இக்குறள்கள் ஒன்றிற்கொன்று பொருள்வேறுபாடில்லை என்பது தெளிவாயிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் பிரின்ஸிபால் ப்ரஹ்மஸ்ரீ V. S. ராமசாமி சாஸ்திரிகள் (B. A; B. L.) எழுதுவது.]

(228-ம் பக்கத்தொடர்ச்சி.)

"5-வது அத்யாயம்."

வ்ரஜகோபீ—விஷ்ணுபுராணம். கிருஷ்ணத் வேஷிகளின் திருஷ்டியில் இந்தக் கதை சரித்திரத்தில் ஒருகளங்கமாகக் காணப்படுகிறது. கிருஷ்ண உபாஸகர்கள் இக்கதையையே கிருஷ்ண பக்திக்கு முக்ய சாதனமாகக் கொள்ளுகிறார்கள். ஆகையால் இக்கதையை நாம் விஸ்தாரமாய்ப் பரிசிலனஞ் செய்வோம்.

மஹாபாரதத்தில் வ்ரஜகோபிகளின் கதை கொஞ்சமும் காணப்படவில்லை. ஸபாபர்வத்தில் சிசுபாலவத பர்வாத்யாயத்தில் சிசுபாலனால் செய்யப்பட்ட கிருஷ்ணநிந்தை விஸ்தாரமாய்க் காணப்படுகிறது. மஹாபாரதம் இயற்றிய காலத்தில் வ்ரஜகோபிகளின் ஸம்பந்தமாகக் களங்கமேற்பட்டிருந்தால் சிசுபாலன் அல்லது சிசுபாலவிருத்தாந்தத்தை யெழுதியுள்ளோர் ஸ்ரீகிருஷ்ணனை நிந்திக்கும் சமயத்தில் இந்த சங்கதியைச் சொல்லாமலிருப்பார்களா? ஆகையால் ஆதிமஹாபாரதமியற்றியகாலத்தில் இக்கதை வழங்கவில்லை. அக்காலத்திற்குப் பிறகே இக்கதை தொடுக்கப்பட்டிருக்கிறதென்று நிச்சயமாய் விளங்கும்.

மஹாபாரதத்தில் சபாபருவத்தில் திரௌபதி வஸ்திரஹரண காலத்தில் த்ரௌபதியானவள் ஸ்ரீ கிருஷ்ணனைக் குறித்துச் செய்த ஸ்தோத்திரத்தில் "கோபீஜநப்ரிய" என்ற பதம் மாத்திரம் காணப்படுகிறது.

பிருந்தாவனம் கோபிகளின் வாஸஸ்தானம். அவ்விடத்தில் கோபர்களும் கோபிகளும் நிரம்பியிருந்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணன்

அதிகசுந்தரன். மாதுர்யமயன். விளையாட்டுள்ள குழந்தை. இதனாலவன் கோபகோபிகள் யாவருக்கும் பிரியபாத்திரமாயிருந்தான். சிறுமிகள், யுவதிகள், கிழவிகள் எல்லோருக்கும் பிரியபாத்திரமாயிருந்தான் ஸ்ரீகிருஷ்ணன். இதுபற்றியே யமலார்ஜுநபங்கம் முதலான உத்பாதகாலத்திலும் பாலனான ஸ்ரீகிருஷ்ணனுக்குத் தீங்கு நேரிட்டதைநோக்கிக் கோபிகள் யாவரும் வருத்தமுற்றார்கள் என்று ஹரிவம்சத்திற் கூறியிருக்கிறது. ஆதலால் "ஸ்த்ரீஜந ப்ரிய" என்கிற பதத்திற்கு சுந்தரவடிவமான இக் குழந்தையின்பேரில் ஸ்திரீ ஜனங்கள்யாவரும் பிரியம் வைத்தார்கள் என்கிற அர்த்தத்தைத்தவிர வேறு ஒன்றுமில்லை.

நாம் முதலில் எந்த நியமம் ஏற்படுத்திக் கொண்டோமோ அந்நியமானுஸாரமாக மகாபாரதத்திற்குப் பிறகு விஷ்ணுபுராணத்தைக்கவனித்தோம்; நாம் முன்பு கண்டபடி விஷ்ணுபுராணம், ஹரிவம்சம், பாகவதபுராணம், இவைகளில் இக்கதைமுறையே விருத்தியடைந்திருக்கிறது. இந்த வ்ரஜகோபீ தத்வமானது மஹாபாரதத்தில் காணப்படவில்லை—விஷ்ணுபுராணத்தில் பவித்திரபாவத்தோடு காணப்படுகிறது. ஹரிவம்சத்தில் முதல் முதலில் ச்ருங்கார விலாஸம் நுழையவிடம்பெற்றிருக்கிறது. அதன் பிறகு பாகவதத்தில் இந்த ச்ருங்கார ரஸபாவங்கள் மிகவும் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. கடைசியில் பிரம்மவைவர்த்த புராணத்தில் ச்ருங்கார ரஸபாவனைகள் வெள்ளம் வெள்ளமாயிருக்கின்றன.

இவ்விஷயங்களை விஸ்தாரமாய்த் தெரிவிப்பதற்காக நாம் விஷ்ணுபுராணத்தில் கோபிகளின் கதை யெவ்விதம் கூறப்பட்டிருக்கிறதோ அதையெல்லா மிங்கேயெழுதமுயலுவோம். விஷ்ணுபுராணம் 5-வது அம்சம் 13-வது அத்யாயம்.

"நிர்மலமான ஆகாயத்தையும், சரத்காலத்துச் சந்திரனது நிலவையும், மலர்ந்த குமுதத்தடாகங்களையும், வாஸனை நிரம்பிய எண்டிசைகளையும், வண்டுக்கூட்டங்களின் சப்தம் நிறைந்த மனோஹரமான வனத்தின் வனப்பையும் பார்த்து, ஸ்ரீகிருஷ்ணன் அச்சமயத்தில் கோபிகளுடன் விளையாடவேண்டுமென மனதில் நினைந்

தான். பலராமருடன் ஸ்ரீகிருஷ்ணன் அதிக மதுரமாக, சங்கீதம் செய்ய ஆரம்பித்தான். அந்த மதுரத்வனியைக்கேட்டுக் கோபிகள் தம் வீட்டுக்காரியங்களையும் விட்டு எவ்விடம் ஸ்ரீகிருஷ்ணன் விளங்கினானோ அவ்விடமே விரைவாகச் செல்லவேண்டுமென்று யத்தனித்தார்கள். ஓர்கோபி அக்காலத்தில் "லயாநுஸாரமாக மெள்ள மெள்ளப்பாடத்தொடங்கினாள். மற்றொருத்தி ஸ்ரீகிருஷ்ணனை மனதில் நினைந்து நினைந்து அவனிடமே மனம் முழுதையும் செலுத்திவிட்டாள். சிலர் ஸ்ரீகிருஷ்ண ஸ்ரீகிருஷ்ணவென்று கூறி வெட்கப்பட்டார்கள். வேறு சிலர் பிரேமவசத்தால் வெட்கத்தைவிட்டு அவனையணுகினார்கள். மற்றுஞ்சிலர் வாசலிற் குருஜனங்களிருக்கிறாரெனக் கண்டு வீட்டிற்குள்ளேயே கண்களை மூடிக்கொண்டு ஸ்ரீகோவிந்தனைத் தியானித்தார்கள். மற்றொரு கோபகன்னிகை ஸ்ரீகிருஷ்ணனை நினைந்து மிகவும் ஆஹ்லாதமடைந்தாள். ஸ்ரீகிருஷ்ணனை நேரிலடையாமல் மஹாதுக்கத்தையடைந்தாள். அதனால் அவள் பாபமெல்லாம் விலகியது. இன்னமொருத்தி பரப்பிர்ம்ம ஸ்வரூபமும் ஜகத்காரணவஸ்துவுமான ஸ்ரீகிருஷ்ணனைச் சிந்தித்துச் சிந்தித்துப் பரோக்ஷார்த்தஜ்ஞானமடைந்து முக்தியை யடைந்தாள். ஸ்ரீகோவிந்தன் சரத்காலச் சந்திரிகை நிறைந்த இவ்விரவில் கோபீஜனங்களாற் சூழப்பெற்று ராஜக்கிரீடை செய்வதற்குப் பிரியப்பட்டான். ஸ்ரீகிருஷ்ணன் வேறு இடஞ்சென்று மறைந்தான்.

அப்பொழுது கோபிகள் ஸ்ரீகிருஷ்ணனுடைய லீலைகளைத் தாங்களும் அநுஸரணஞ்செய்து கூட்டங் கூட்டமாகப் பிருந்தாவனமத்தியில் அங்குமிங்கும்தேட ஆரம்பித்தார்கள். ஸ்ரீகிருஷ்ணனையே மனதிற்கொண்டு ஒருவருக்கொருவர் இவ்விதமாகப்பேச ஆரம்பித்தார்கள். நான் ஸ்ரீகிருஷ்ணன். இதுதான் அழகிய நடை. நீங்கள் என் நடையைப் பாருங்கள் எனக்கூறினாள். வேறு ஒருத்தி நான் ஸ்ரீ கிருஷ்ணன். என் கானத்தில் செவிசாயுங்களெனவும், மற்றொருத்தி துஷ்டக்காளியனே இவ்விடமேயிரு. நான் ஸ்ரீகிருஷ்ணன் எனவுங்கூறிக் கையை லீலையாகத்தூக்கி ஸ்ரீகிருஷ்ணலீலையை அநுகரணஞ் செய்தாள். வேறொருத்தி "ஏகோபர்களே! நீங்கள் வீணாக மழைக்குப் பயப்படவேண்டாம்; நான் இவ்விடத்திலேயே

கோவர்த்தனத்தை உயரத்தூக்கிப் பிடிப்பேனெனவும், மற்று மொருத்தி கிருஷ்ண லீலையை அநுகரணஞ்செய்து நான் தேனுகா சுரனைச்சுழற்றியெறிவேன். நீங்கள் பயப்படாதீர்களெனவும் கூறிக் கொண்டு எல்லாக்கோபிகளும் ஸ்ரீ கிருஷ்ணனிடம் மனம் பற்றிய வர்களாய்ப் பிருந்தாவனத்தில் திரிந்துகொண்டிருந்தார்கள். ஒரு அழகியகோபி பூமியைநோக்கி எல்லா அவயவங்களிலும் மயிர்க் கூச்செடுத்தவளாய் நயனோத்பலங்களை மலரச்செய்துகொண்டு சொல்ல ஆரம்பித்தாள்.

யாவரும் வாருங்கள் த்வஜ சக்கராங்குச ரேகைகளால் அலங் கரிக்கப்பட்ட இந்த அடிச்சுவடு நடையழகுவாய்ந்த ஸ்ரீகிருஷ்ண னுடையது. யாரோபுண்யவதியாயும் அழகுவாய்ந்தவளாயுமுள்ள கோபி அப்பொழுது பகவானுடன் கூடச்சென்றிருக்கிறாள். இந்தக் கனமாயும் சிறிதாயுமுள்ள அடிச்சுவடு அவளுடையது. அந்த மஹாத்மாவான ஸ்ரீகிருஷ்ணனின் அடிச்சுவட்டின் நுனிமாத்திரம் எவ்விடம் காணப்படுகிறதோ அவ்விடத்தில் ஸ்ரீகிருஷ்ணன் உயர இருக்கும் புஷ்பங்களை யெட்டிப் பறித்திருக்கிறான். புஷ்பங்களால் பாக்யவதியான கோபிஒருத்தியை அவன் அலங்கரித்திருக்கிறான். அவள் ஜன்மாந்தரத்தில் பரமாத்மாவான விஷ்ணு பகவானை ஆரா தித்திருக்கவேண்டும். மெல்லியதான அடிச்சுவட்டைக் காண்பதி லிருந்து நிதம்ப பாரத்தால் மெள்ளமெள்ள நடக்கிற யாரோ கோபியைக் கையிற் பிடித்துக்கொண்டு பகவான் அழைத்துக் கொண்டு போகிறானெனத் தெரிகிறது. கூடினமாத்திரத்தில் அவ ளைக் கைவிட்டு ஸ்ரீகிருஷ்ணன் வேறிடஞ்சென்றதால் அவனைத் தேடியுங் காணாமல் நிராசையாய் மெல்ல மெல்ல அவள் திரும்பின ளென்றும் காணப்படுகிறது.” அந்த ஸ்ரீகிருஷ்ணனே சீக்கிரம் நான் திரும்பி உங்களண்டை நிச்சயமாய் வந்துவிடுகிறேன் என்று கூறி யுள்ளாரோ? அதற்காகவே அவருடைய திரும்பிய வடிச்சுவடு விரை வாய் வைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. இந்த வீட்டில் ஸ்ரீகிருஷ்ணன் நுழைந்திருக்கவேண்டும். ஏனெனின் இதற்குப் பிறகு ஸ்ரீகிருஷ்ணனின் அடிச்சுவட்டைக் காணோம். இவ்விடத்திற் சந்திரகிரணங்கள் நுழையவில்லை. திரும்பிப்போவோம் வாருங்கள்.

பிறகு விகாசித்த முகபங்கஜத்தோடும் புன்சிரிப்போடும் த்ரைலோக்ய ரக்ஷகனுன ஸ்ரீ கிருஷ்ணபகவான் வந்தார். ஸ்ரீ கோவிந்தன் வருவதைப் பார்த்துச் சில கோபிகள் மிகவும் ஆநந்தமடைந்தவர்களாய் ஸ்ரீகிருஷ்ண ஸ்ரீகிருஷ்ணவென்று சொல்லவாரம்பித்தார்கள். மற்றுஞ் சிலருக்கு ஆநந்தப் பெருக்கால் பேசவே நாவெழவில்லை. சில கோபிகள் புருவத்தை நெறித்து ஸ்ரீஹரியைப் பார்த்துப் பகவானின் முகபங்கஜத்தைத் தன் நயனங்கள் வாயிலாகத் தன்னிஷ்டப்படிப் பானஞ்செய்ய வாரம்பித்தனர். பிறகு பகவான் கோபிகளைத் தேற்றுவதற்காகச் சிலர்களைக் கடாக்ஷ வீக்ஷணத்தாலும், வேறு சிலர்களைப் பிரியபாஷணத்தாலும், மற்றுஞ் சிலரைக் கரஸ்பர்சத்தாலும் சமாதானம் செய்தார். பிறகு உதாரசீலனுன ஸ்ரீ பகவான் பிரஸந்நசித்தர்களான கோபியருடன் கூடி ஆதரவுடன் ராஸமண்டல மத்தியில் விளையாடவாரம்பித்தார். ஆனுல் அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனின் அருகிலேயே நின்றுகொண்டு அவனைவிட்டு விலகவில்லை. ஆதலால் கோபியர்களுடன் கூடி ராஸமண்டல மியற்ற முடியவில்லை. பிறகு ஒவ்வொரு கோபியையும் கையால் பிடித்து அவர்கள் பகவானின் கரஸ்பர்சத்தால் ஆனந்தபரவசர்களாய்க் கண்களை மூடிக்கொண்டிருக்கும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணபகவான் ராஸமண்டலத்தை யாரம்பித்தார். அவர் கோபிகளின் அசைகிற வளையல் சப்தத்துடனும் கோபிகளின் கீதத்துடனும் ராஸக்கிரீடை செய்ய வாரம்பித்தார். கோபிகள் அடிக்கடி கிருஷ்ணநாமாவையே பாடத் தொடங்கினுர்கள். ஓர் கோபி நர்த்தனச் சிரமத்தால் களைப்படைந்து சல் சல் என ஒலிக்கிற வளையல்பூண்ட பாகுலத்தை (கையை) ஸ்ரீகிருஷ்ணன் தோளின்மேல் வைத்தாள். மற்றோர் கோபி ஸ்ரீ கிருஷ்ண கீதத்தின் லயாநுசாரமாய்க் கபடமாகக் கிருஷ்ணனை ஆலிங்கனஞ்செய்து முத்தமிட்டாள். ஸ்ரீ பகவானின் புஜத்வயங்கள் ஓர் கோபியின் இருகன்னங்களிலுந்தொட மயிர்க்கூச்செடுத்தவளாகவானுள். எதுவரை ஸ்ரீ கிருஷ்ணபகவான் ராஸகானத்தைப் பாடிக்கொண்டிருந்தாரோ அக்காலம்வரைக் கோபிகள் "நல்லது கிருஷ்ண நல்லது கிருஷ்ண" எனச் சொல்லிக்கொண்டு இருமடங்கு பாடவாரப்பித்தார்கள். ஸ்ரீ கிருஷ்ணன் மெல்ல நகர்ந்தான். அவர்களும் நடக்கவாரம்பித்தார்கள். ஸ்ரீகிருஷ்ணன் திரும்பி அவர்கட்கெதிரே

நின்றான். இவ்விதம் "அநுலோம ப்ரதிலோம கதி" மூலமாகக் கோபிகணங்கள் ஸ்ரீ கிருஷ்ண பஜனை செய்தார்கள். மதுசூதனன் கோபிகளுடன்கூடி யவ்விடத்திலேயே கிரீடைசெய்தான். அவர்கள் பகவானைவிட்டுப்பிரிந்த ஒருக்ஷணத்தையும் கோடி வருஷங்களாகக் கருதினார்கள். கணவன் தடுத்தலையும், தந்தை தடுத்தலையும், உடன் பிறந்தோன் தடுத்தலையும் பாராட்டாது கோபிகள் இராக்காலத்தில் கண்ணனுடன் கிரீடை செய்தார்கள். பரமாத்மாவான மதுசூதனன் தனது குழந்தைப் பருவத்தை அறிந்துகொண்டே ராத்திரியில் கோபிகளுடன் கிரீடை செய்தான்.

(தொடரும்.)

ஸ்ரீ:

நசிகேதோபாக்யானம்.

[மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் ந்யாய வேதாந்த வித்வான் ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸகோபாலாசார்ய ஸ்வாமி எழுதியது.]

(235-ம் பக்கத் தொடர்ச்சி.)

நசிகேதஸ்ஸே! இன்னும் சொல்லுகிறேன் கேட்பாயாக. உலகத்தில் ஒருவன் 'நான் இவனைக் கொல்லப்போகிறேன்' என்று கத்தியினால் ஒருவன் சரீரத்தை வெட்டுகிறான். வெண்டுண்டவன் 'நான் இவனால் கொல்லப்பட்டேன்' என்கிறான். இவ்விருவரும் ஆத்மஸ்வரூபத்தின் உண்மையறிந்தவராகார். ஆத்மா கொல்லுதற்குரிய வஸ்துவில்லையாதலால் இவர்கள் கொல்லுகிறேன் என்றதும், கொல்லப்பட்டேன் என்றதும் மயக்கவுணர்வின் கார்யமாகும். அழிவற்ற ஜீவாத்மாவுக்கும் ஆத்மபூதனான பரமாத்மா, ஸூக்ஷ்மஸ்வரூபியான ஆத்மாவைக்காட்டிலும் பரமஸூக்ஷ்மனாய், மஹத்தான ஆகாசத்தைக்காட்டிலும் மஹத்தரனாய், எல்லாவற்றையும் தன்னுள்ளடக்கித் தானே வ்யாபகனாய், காம்யகர்மங்களினின்றும் விடுபட்டவனாய், முற்றுமுணர்தல் முதலிய குணங்களால் விளங்குகின்றான்.

இங்ஙனம் விளங்குகின்ற பரமாத்மாவை எவன் ஸாக்ஷாத்கரிக்கின்றானோ அவன் அப்பொழுதே சோகங்களினின்றும் விடுபட்டவனாகிறான். பகவானுடைய அநுக்ரஹம் பெறாதவர்கட்குப் பரமாத்மாவின் உண்மையான ஜ்ஞாநம் ஏற்படமாட்டாது. ஸமஸ்த வஸ்துக்களிலும் அந்தராத்மாவாயுள்ள அந்தப் பரமாத்மாவை எம்போன்றவர்களைத் தவிர மற்றெவர்களால் அறியமுடியும்? கர்மத்தால் ஏற்படத்தக்க சரீர சம்பந்தமற்ற மஹத்தான வைபவத்தோடு கூடிய பரமாத்மாவின் உண்மை நிலையை அறிந்த எந்தத் தீரர்தாம் சந்தோஷிக்காதிருப்பார்கள்.

நசிகேதஸ்ஸே! உன்னிடத்திலுள்ள அன்பின் மிகுதியால் இன்னும் சொல்லுகிறேன் கேட்பாயாக. இந்தப் பரமாத்மா மனனுணர்வாலும் மிகுதியாக சாஸ்திரங்களைப் பயில்வதாலும் அறியத்தகுந்தவனல்லன். பகவத் விஷயமான மிகுந்த ப்ரீதி உபாஸகனுக்கும், உபாஸகனிடத்தில் ஈசுவரனுக்கன்பும் எப்பொழுது ஏற்படுமோ அப்பொழுதுதான் அந்த உபாஸகனுக்குப் பரமாத்மா தன்னுண்மையான ஸ்வரூபத்தைத் தோற்றுவிக்கின்றான்.

நசிகேதஸ்ஸே! இந்தப் பரமாத்மாவை அடைதற்குக் காரணமாயும் உபாஸனைக்கு அங்கமாயுமுள்ள சில தர்மங்களை உபதேசிக்கிறேன் கேட்பாய் § பாதாரம் பரத்திரவ்யங்களை அபஹரியாதிருத்தல். காமக்குரோதம் முதலியவற்றில் மனம் செல்லவொட்டாமல் அடக்குதல், மனத்தைத் தன் வயப்படுத்துதல் முதலியவைகளே உபாஸனாங்கங்களாகச் சாஸ்திரங்களிற் சொல்லப்பட்டுள்ளன. இந்த உபாஸனாங்கங்களைப்பெறாதவன் சாஸ்திரங்களைப் பயின்றதனாலுண்டான அறிவையுடையவனாயிருந்தாலும் அவன் பரமாத்மாவை அறியமாட்டானென்பதை நன்கறிவாயாக. சேதனாசேதன ரூபமான எல்லா ஜகத்தும், எல்லாப் பிராணிகளையும் ஹிம்ஸிப்பவனான யமனும் பரமாத்மாவுக்கு முறையே † ஓதனமாகவும், ஊறுகாயாகவுமாகின்றன. இதனால் ஸர்வஸம்ஹார கர்த்ருத்வம் ஈசுவரன் ஒரு

§ பாதாரம்—பிறன்மனைவி.

† ஓதனம்—உணவு.

வனுக்கே உண்டென்பது பெறப்படும். இத்தகைய பரமாத்மாவின் ஸ்வரூப ஸ்திதி இவ்வாறிருக்குமென்று எவனால் அறியமுடியும்?.

நசிகேதஸ்ஸே! இவ்வாறு கூறியதுகொண்டு ஒருவராலும் அறியமுடியாத பரமாத்மாவின் ஸ்வரூப ஸ்திதியை நாம் எவ்வாறு அறிதல் இயலும் என்று கருதிவிடாதே. பரமாத்மாவும் ஜீவாத்மாவும் சரீரத்திலுள்ள ஹ்ருதயாகாசத்தில் சேர்ந்தேயிருக்கிறார்கள். இருவருள் ஒருவன் சக்திமானாயும், மற்றொருவன் அவன் அம்சமாயுமிருக்கின்றார்கள். இவருள் ஜீவன் கர்மபலத்தை அநுபவிக்கின்றான். பரமாத்மா கர்மபலத்தை யநுபவிப்பதில்லை. இந்த இருவரும் ஹ்ருதயமாகிய ஒரு குகையிலிருப்பதால் உபாஸகனாகிய ஜீவனுக்குப் பரமாத்மா கிட்டுவானென்பதில் சந்தேகமில்லை. ஒரே குகையில் உபாஸ்யனாகிய பரமாத்மா இருக்கிறானென்பது முடிவாகில் ரதியாகிய (தேராளியாகிய) ஜீவன் ரதமாகிய சரீரத்திலேறி பலமாகிய பரமாத்வைச் சென்று பற்றுகிறானென்று தூரத்திலுள்ள வஸ்துவைச் சென்று கிட்டுவதுபோலச்சொல்வது பொருந்தாதேயெனின்; ஜீவன் பரமாத்மா என்ற இருவரும் ஒரே சரீரத்திலிருந்தாலும் ஜீவன் "வாராஹிய்யாநாத்ரு திரோஹிதழ்" மாயையிற்கட்டுண்டிருப்பதால் தன் சமீபத்திலுள்ள பரமாத்மாவை அவனறிவதில்லை.

இதற்கு ஒரு திருஷ்டாந்தம் கூறுகிறேன் கேட்பாயாக. அது வருமாறு.— ஒத்தமனமுடைய தலைவன் தலைவியர் வாழ்ந்துவந்த காலத்து ஒருநாள் நாயகன் வண்டியிலேறி அயலூர் செல்லலுற்றபோது மனைவி பாதேயத்தை (கட்டுச்சோற்றை) வண்டிக் கூட்டில் ஒருபுறத்திற் கட்டிவைத்தாள். சிறிது தூரம் வண்டி சென்றபின் நாயகன் 'அந்தோ! பாதேயத்தை வைத்துவிட்டு வந்தோமே; பசிப்பிணி வந்துற்றபோது அதைத் தணிப்பதற்கு வேறொன்றுமில்லையே; என்செய்வது' என்று கருதி மறுபடியும் வீட்டைநோக்கித் திரும்பி வந்தான். இவன் வருதலைக்கண்ட நாயகி திரும்பி வருதற்குக் காரணம் யாதென்று வினவினாள். அப்பொழுது நாயகன் பாதேயத்தைக் கொண்டுபோவதற்கு வந்தேன் என்றான். இதைக்கேட்ட நாயகி இதோ வண்டியின் கூட்டில் கட்டி வைத்துள்ளேனே; பார்க்கவில்லையோ என்றறிவுறுத்தினாள். அதைக்கண்ட நாயகன் 'பக்கத்தி

விருப்பதையு மறியாமல் வீணே திரும்பி வந்துவிட்டோமே' என்று வருந்திச் சென்றான். அதுபோல ஜீவன் மாயையிற் கட்டுண்டிருக்கின்றானாதலால் தன் இருதயத்திலிருக்கின்ற பரமாத்மாவை அறியாதிருக்கின்றான். இங்குப் பாதேயத்தை யறிவித்ததுபோல ஜீவன் ஆசார்யோபதேசத்தால் மாயையினின்று விடுபட்டுப் பரமாத்மாவை அடைவான்.

பஞ்சாக்கினியின் பணிவிடையால் பரிசுத்தமான மனத்தையுடையவராயும், முன்பு நான் உபதேசிக்கப்பட்ட திருநாசிகேதத்தை உபாஸித்தவராயுமுள்ள பிர்ம்ம வித்துக்கள், ஜீவாத்மா பரமாத்மா என்ற இருவரும் ஒரே குகையிலிருக்கிறார்களென்று கூறினார்கள்.

நசிகேதஸ்ஸே! நிர்விகார ரூபியான பரப்பிர்ம்மத்தை அடைவதற்கு உபாயமாயும் சம்சாரசாகரத்தைத் தாண்டவேண்டுமென்ற இச்சையுடையவர்கட்கு நிர்ப்பயமாயும் வலியகரைபோன்றதாயுமுள்ள நாசிகேதாக்னியை நீ அடைந்துள்ளனையாதலால் பரப்பிர்ம்மத்தை உபாஸிக்க உனக்கருமையில்லை. இப்பொழுது உனக்குப் பரமாத்மாவை அடைதற்குச் சாதனமாயுள்ளவற்றை உபதேசிக்கிறேன்.

இந்தச் சரீரத்திலிருக்கின்ற ஜீவனை ரதியாகவும், (தோாளியாகவும்) சரீரத்தை ரதமாகவும், புத்தியைச் சாரதியாகவும், மனதைக் கடிவாளமாகவும், இந்திரியங்களை (மெய்வாய் கண் மூக்கு செவிகளை) குதிரைகளாகவும், விஷயங்களை (சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்களை) வழிகளாகவும் அறிந்துகொள். இவ்வாறாக உருவகஞ் செய்யப்பட்ட சரீரம், இந்திரியம், மனம் புத்திகளில்லாவிடில ரதியாக உருவகஞ்செய்யப்பட்ட ஆத்மாவுக்கு எத்தொழிலும் செய்தலியலாது. அடங்காத குதிரையை நடத்துபவன் அதனால் துன்புறுதல் போல சிற்றின்பங்களில் ஈடுபடுகின்ற இந்திரியங்களையுடையான் துன்புறுதலும், தன்வசப்பட்ட குதிரையை நடத்துபவன் அதனால் இன்புறுதல்போல தன்வசப்பட்ட இந்திரியங்களையுடையான் இன்புறுதலுமபற்றி இவ்வாறு சரீரமுதலியவை உருவகஞ் செய்யப்பட்டன. இந்திரிய நிக்ரஹமுடையவனே சம்சாரமாகிய கடலைத் தாண்டி உத்தமமான கெதியை அடைவான் என்பதில் சந்தேகமில்லை

நசிகேதஸ்ஸே! மற்றொரு விஷயமும் இப்பொழுது நான் உபதேசிக்கின்றேன்; கேட்பாயாக. சரீர முதலிய இந்திரியங்களில் எது எதை அடக்குமோ அதுவே சிறந்ததாகக் கொள்ளப்படும். * இந்திரியங்களைக்காட்டிலும் அர்த்தம் சிறந்தது. ஏனென்றால் இந்திரியமானது ஸ்வாதீனத்திலிருந்தபோதிலும் விஷயங்கள் சமீபத்திலிருக்கும்பக்ஷத்தில் ஒருபொழுதும் இந்திரியங்களை ப்ரவர்த்தியிலிருந்தும் மீட்டமுடியாது. அர்த்தங்களைக்காட்டிலும் மனம் சிறந்தது. மனதில் விஷயங்தோனறும்பொழுது விஷயம் சமீபத்தில் இல்லாதபோதிலும் மனம் ப்ரவர்த்தியாமலிராது. அந்த மனத்தைக் காட்டிலும் புத்தி மேலானது. புத்தியைக்காட்டிலும் கர்த்தாவாகிய புருஷன் (ஆத்மா) சிறந்தவன். அத்தகைய புருஷனைக்காட்டிலும் பரமாத்மா உயர்ந்தவன். இவனைக்காட்டிலும் உயரிய வஸ்து ஒன்றுமில்லை. ஒன்றொழியாத எல்லா வஸ்துக்களிலும் நிறைந்து விளங்குகின்றவன் இவனே. மாயையால் கட்டுண்டு அடக்கமுடியாத மன முதலிய அந்தக்கரணங்களையுடையவர்கட்கு பரமாத்மா ஒருபோதும் தன் ஸ்வரூபத்தைக் காட்டமாட்டான். இந்திரியங்கள் வழியாக மனம் செல்லாமல் அடக்கிப் பிறழாத மனத்தையுடைய ஸூக்ஷ்ம தரிசிகளாகிய பெரியார்களால் அறியப்படும் பெருமையுடையவனுவான் பரமாத்மா.

நசிகேதஸ்ஸே! இந்திரியங்களை மனதிலும், மனத்தைப் புத்தியிலும், புத்தியை ஆத்மாவிலும், ஆத்மாவைப் பரமாத்மாவிலும் நியமனஞ் செய்யவேண்டும். † நியமனஞ்செய்வதாவது இந்திரியங்களை மனத்தினிடத்திலும், மனத்தைப் புத்தியினிடத்திலும், புத்தியை ஆத்மாவிடத்திலும், ஆத்மாவைப் பரமாத்மாவிடத்திலும்

---

* இந்திரியங்களாவன.—மெய் வாய் கண் மூக்கு செவி என்ற ஞானேந்திரியங்களைந்தும், வாக்கு பாணி (கை) பாதம் பாயு உபஸ்தம் என்ற கர்மேந்திரியங்களைந்துமாம்.

† மேலே குறிப்பிடப்பெற்ற இந்திரிய நியமனக்கிரமம் சுருதப்பிரகாசிகையில் விவரமாகக் கூறப்பெற்றுளது. அது வருமாறு.— ,,𑌵𑌾𑌚𑍋 𑌮𑌨𑌸𑌿 𑌨𑌿𑌯𑌮𑌨𑌂 [illegible] [illegible] [illegible] 𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿 [illegible] [illegible]

நிலைபெறச் செய்வதாம். நான் இதுவரையிலும் உபதேசித்துவந்த உபதேசத்தால் அஜ்ஞானமாகிய நித்திரையினின்று மீண்டெழுவாயாக. நான் முன்பு தெளிவாகக்கூறிய ஆத்ம தத்வத்தையும், அதை அடைதற்குரிய உபாயத்தையும் நன்றாக மனத்தில் பதித்துக்கொள்வாய். இருபுறங்களிலும் கூர்மையுடைய கத்திகளினிடையே சஞ்சரிக்கின்றவன் சிறிது அஜாக்ரதையாயிருப்பானாகில் அவன் எவ்வாறு அழிவடைவானோ அதுபோல ஆத்ம ஸ்வரூபத்தை உபதேசிக்கின்ற இதுசமயத்தில் நீ உதாசீனமாக இருப்பையாகில் நிச்சயமாய்த் தீங்கடைவாய். பரம்பொருளாகிய பரமாத்மாவின் ஸ்வரூபத்தை நன்கறிவையேல் மஹா பயங்கரமான ஸம்ஸாரத்தினின்றும் விடுபடுவாய்; என்று கூறினன்.

இந்த நசிகேதோபாக்யானத்தை விசுவாசத்துடன் படிப்பவனும், கேட்பவனும், பிராம்மணக்குழாத்தில் கூறியவனும், சிராத்த காலத்தில் பயில்பவனுமாகிய இவர்கள் ஸ்ரீ வைகுண்டத்தை யடைந்து நித்யானந்தத்தை அநுபவிப்பார்கள்.

முதல்பாகம் முற்றுப்பெற்றது.

(தொடரும்.)

நம்। ஜநஸ்ஃ ஸுஜ்ஜ நியமநம் வ்யவஸாயாநுஸாரேண ப்ரவ்ருத்திதாவாதநம்। ஸுஜிஷ்வாமெஷு ஹெயத்வாஜ்யவஸாய ராஹிவா। தஸ்யாஃ ஸுஜொரத்நி நியமநஜாஜ ஸஹஸொவாஜெயதயா ஸாக்ஷாத்காயஞ் உஜெக்ஷதஹதயஞ் விஷயத்வாவாதநம்। ஸாஜெஹஸத ஊஜிஞ் ஷடக ப்ருதிஹதெ ஸாஜெ குத்நி ஜஹத குத்நொ ஜீவஸ்ய நியமநஜாஜ தஜெஷதா ப்ருதிவத்திஃ".

ஸ்ரீ:

ஸ்ரீபாண்டிய மதுரா, தசகோத்ர ஸ்ரீவைஷ்ணவ ராமாநுஜ ஸித்தாந்த நிர்வாஹஸபை.

இப்பெயர் கொண்ட ஸபை ஸ்ரீ கூடலாகிய மதுரைமாநகரில் வடக்குமாசிவீதி ஸ்ரீ கிருஷ்ணன்கோவில் முன்மண்டபத்தில் 29—9—29வ யில் ஸ்தாபிக்கப்பெற்றது.

செல்லூர் ஸ்ரீவைஷ்ணவர்கள் என்று நவீன நாமதேயம் பெற்ற தசகோத்ர ஸ்ரீவைஷ்ணவர்கள், பாண்டிய ராஜாக்களிடமிருந்து அநேக கிராமங்களையும் சன்மானங்களையும்பெற்றும், பெரும்பான்மையாக பாண்டியநாட்டிலே நித்ய வாஸஞ்செய்துகொண்டும், அந்தந்த திவ்ய தேசத்தெம்பெருமான்களை மங்களா சாசனம் பண்ணிக்கொண்டும் அதிசம்பத்துடனே வாழ்ந்துகொண்டு வந்தும் சமூகச்சேர்க்கையில்லாமலும் ஸ்ரீமத் ராமாநுஜ ஸித்தாந்தத்தைச் சரிவர நிர்வஹிக்கக் கூடாமலுமிருக்கின்ற தற்காலத்தில் எம்பெருமான் திருவருளால் இச்சபை தொடங்கப்பெற்று பிரதி ஞாயிற்றுக்கிழமையிலும் மாலை 4-மணிக்குமேல் ஸபை கூடப்பட்டு பெரியோர்களால் அரியபல உபந்யாசங்கள் நடைபெற்றுவருகின்றன. ஸபை ஏற்பட்ட ஒரு மாதத்திற்குள் ஸ்ரீபாண்டிய தசகோத்ர ஸ்ரீவைஷ்ணவர்களில் அநேகர் அங்கத்தினர்களாகச் சேர்ந்துள்ளார். அபிமானிகளும் பலரிருக்கிறார்கள். சிலர் மாதந்தோறும் ரூபா 1-வீதமும், சிலர் ரூபா அரை வீதமும், மற்றோர்கள் ரூபா கால் வீதமும் கொடுத்துவருவதாகக் கையொப்பமிட்டிருக்கிறார்கள். அங்கத்தினர்களிற் சிலர் சமூகத்தார்களுக்குப் பலவிதம் பயன்படுமாறு ஏற்ற ஒரு மனைவாங்கத் தாங்கள் பொருளுதவிபுரிவதாயும் வாக்களித்துள்ளார்கள்.

ஷை கிருஷ்ணன்கோவில் 29-9-29வயில் வக்கீல் ஸ்ரீ. உ. வே. நரஸிம்மய்யங்கார் ஸ்வாமியவர்களால் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயங்களைப்பற்றியும், ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த நிர்வாஹத்தைப் பற்றியும், 6—10—29வயில் ஷை ஆலயத்தில் ஸ்ரீ. உ. வே. ஸாதுராமாநுஜாசார்யஸ்வாமி யவர்களால் விசிஷ்டாத்வைதத்தைப்பற்றியும் பிரசங்கிக்கப்பட்டன.

பிற்பாடு மதுரை வடக்கு ஆவணிமூலவீதி, ஸ்ரீ. உ வே. பொன்னுவய்யங்கார் ஸ்வாமி வித்யாசாலையில் பிரதி ஞாயிற்றுக் கிழமையில் ஷை ஸபை கூடப்பட்டு வருகிறது.

ஷை வித்யாசாலையில், ஸ்ரீ. உ. வே ஸாதுராமாநுஜாசார்ய ஸ்வாமியவர்களால் 12—10—28உயில் விபீஷணுழ்வான் சரணு கதியைப்பற்றியும், 20—10—29உயில் கோமடம அ. ரா. லக்ஷ்மணய்யங்கார் ஸ்வாமியவர்களால் ஸ்ரீபாண்டிய மதுரா தசகோத்ர ஸ்ரீ வைஷ்ணவ ப்ரபாவங்களைப்பற்றியும், தாம்ரசாசனங்கள் முதலிய ஆதாரங்களுடன் 27—10—29உயில் வக்கீல் ஸ்ரீ. உ. வே. சுந்தரராஜய்யங்கார்ஸ்வாமியவர்களாலும் பல பெரியோர்களாலும் சங்க அபிவிர்த்திக்கான பல விஷயங்களைப்பற்றியும் பிரசங்கங்கள் இதுவரை நடைபெற்றிருக்கின்றன.

சேர்ந்துள்ள மெம்பர்களில் ஸ்ரீ. உ. வே. கிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி அக்ராசனுதிபதியாகவும், ஸ்ரீ. உ. வே. சுந்தரராஜய்யங்கார் ஸ்வாமி காரியதரிசியாகவும், ஸ்ரீ. உ வே கோபாலகிருஷ்ணய்யங்கார் ஸ்வாமி பொக்கிஷதாரராகவும், ஸ்ரீ. உ. வே. திருவேங்கட உபாத்தியாயர் உபகாரியதரிசியாகவும் சபையோர்களால் தீர்மானிக்கப் பெற்றிருக்கிருர்கள்.

இந்த, தசகோத்ர ஸ்ரீ வைஷ்ணவர்கள், பாண்டிய நாட்டில் சுமார் 150 கிராமங்களில் சுமார் 2000 ஜனத்துகையுடையோர்களாயிருந்தும் சமூக அபிவிர்த்திக்காக ஏற்பட்டிருக்கும் இம்மகா சபையில் போதிய அங்கத்தினர்கள் சேராமலிருப்பது வருந்தத்தக்கது.

ஆதலால் தசகோத்ர ஸ்ரீவைஷ்ணவர்கள் பெரும்புகழ்பெற்று வைஷ்ணவ ரத்னங்களாய் விளங்கிய தங்கள் முன்னோர்களின் ப்ரபாவங்களையும், தத்காலநிலைமையையும் கவனித்து, பாக்கியவசத்தால் தோன்றிச் சிசுவாயிருக்கும் இச்சங்கத்தை ஆதரித்துத் தாங்களும் அங்கத்தினர்களாகி, சக்தியானுசாரம் பொருளுதவிபுரிந்து புஷ்டி பாக்கி, ப்ரகாசிப்பிக்கச் செய்யவேணுமாய்ப் பிரார்த்திக்கப்படுகிறது.

கோமடம், அ. ரா. லக்ஷ்மணையங்கார்,

அடியார்க்கடியேன்.

ஸ்ரீ:

தூத்துக்குடி,
ஸ்ரீ பாலகிருஷ்ண ஸபை.

இச்சபை, தன் பெயருக்கேற்றவாறு வருடந்தோறும் ஸ்ரீ ஜயந்தி தினம் முதல் ஸ்ரீ பாகவத முதலிய செவிக்கினிய புண்ணிய சரிதங்களை யாவரும் செவிமடுத்தின்புறுமாறு செவிபறிவுறுத்தி வருகின்றது. அம்முறையில் நாளது சுக்லஞு ஆவணிமீ ஸ்ரீஜயந்தி முதல் சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்யஸ்வாமியால் ஸ்ரீபாகவதத்தில் கண்ணபிரான் அவதாரந்தொடங்கி ருக்மணி கல்யாண முடிவாகக் கதாப்பிரஸங்கமும், திருமந்த்ரார்த்த காலக்ஷேபமும் சாதிக்கப்பெற்றன.

இதுநிற்க, இச்சபையின் சார்பாக நாளது-ஞு கார்த்திகைமீ 8உ (23-11-29) சனிக்கிழமையன்று மதுரை ஸ்ரீ. உ. வே. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்ஸ்வாமி (B. A; B. L. ஹைகோர்ட்டு வக்கீல்) யின் அக்ராஸநாதிபத்தியத்தில் மதுரை ஸம்ஸ்க்ருத காலேஜ் தமிழாசிரியர் ஸ்ரீ. உ. வே. T. N. அப்பனையங்கார்ஸ்வாமியால் 'கம்பர் திருவள்ளுவரின் கருத்தமைதி' என்ற விஷயமும், மதுரை ஹரிஸமயதிவாகரப் பத்திராதிபர் ஆ. அரங்கராமாநுஜ தாஸரால் 'திருவள்ளுவர் சமயம்' என்ற விஷயமும் உபந்யஸிக்கப்பெற்றன. பின்னர் அக்ராஸநர் உபந்யாஸகர்களின் உரைகளின் ஸாராம்சங்களை எடுத்துரைத்ததோடு தமது அபிப்பிராயத்தையும் ஸபையோர்கள் வியக்குமாறு உபந்யஸிக்க ஸபை இனிது நிறைவேறியது.

மேலும் நாளது கார்த்திகைமீ 9உ (24-11-29) ஞாயிற்றுக்கிழமையன்று ஸபையிருக்குமிடத்தில் அமைக்கப்பெற்றிருந்த சிங்காரப்பந்தலில் ருக்மணி கல்யாணம் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. அப்பொழுது ஸ்ரீ. உ. வே. வித்வான் வேங்கடாசார்யஸ்வாமி ஸ்ரீபாகவதத்தில் ருக்மணி கல்யாண கட்டத்தில் குறிக்கப்பெற்றுள்ள விஷயங்களை விரிவாகவும் தெளிவாகவும் உபந்யஸித்தருளினர். பின்னர் ஸபையில் வந்திருந்தவர்கட்கு சந்தன தாம்பூலாதிகள் வழங்கப்பெற ஸபை மங்களகரமாய் நிறைவேறியது.